குற்றவியல் நீதித்துறை நடுவர், நீதிமன்றம், ஓமலூர்.
முன்னிலை: திருமதி.S.ஷர்மிளா, B.A.B.L.(Hons.), L.L.M.
குற்றவியல் நீதித்துறை நடுவர், ஓமலூர்.
சி.சி.எண்.182/2013

அ.சா.9

2025–ம் ஆண்டு மார்ச் 12ம் தேதி புதன்கிழமை அரசு தரப்பு சாட்சி 09–வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு.ஆனந்தன் என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | குமார் | ஜாதி | |
| தந்தை பெயர் | வேலாயுதம் | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | |

விசாரணை தொடங்கிய நேரம்: மதியம் 01.08 மணி,

Accused A2. Subramanian Present. A1.Ramasami died and charge abateds. Advocate Mr.Siddharthasankar present for all accused. APP Mr.P.Suresh present.

**முதல் விசாரணை :**

**1.** நான் சேலம் குரங்குச்சாவடியில் குடியிருந்து வருகிறேன். நான் பாகல்பட்டி கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து, பணிஓய்வு பெற்றுவிட்டேன். கடந்த 08.07.2013 ஆம் தேதி பாகல்பட்டி கிராம நிர்வாக அலுவராக பணியிலிருந்தபோது, ஓமலூர் காவல் ஆய்வாளர் காலை 09.00 மணியளவில் செல்போனில் என்னை தொடர்பு கொண்டு, பாகல்பட்டி பெருமாள்கோயில் அருகே, வரச்சொன்னார்.

2. நானும், கிராம உதவியாளர் செல்வகுமார் என்பவரும் அங்கு சென்றோம். பெருமாள் கோயில் அருகே டாரஸ் லாரி ஒன்று பதிவெண் பலகை இல்லாமல் நின்று கொண்டிருந்தது. அங்கு காவல் ஆய்வாளர் சுப்ரமணி மற்றும் ராமசாமி ஆகிய இருவரை விசாரித்தார். சுப்ரமணி என்பவரை காலை 09.15 மணி முதல் 10.15 மணி வரை விசாரித்து ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்தார். அதில் நானும், கிராம உதவியாளர் செல்வகுமார் என்பவரும் சாட்சி கையெழுத்து செய்தோம். என்னிடம் காட்டப்படும் எதிரி சுப்ரமணி என்பவரின் ஒப்புதல் வாக்குமூல நகலில் உள்ள முதலாவது

கையெழுத்து என்னுடையது. ( **அந்த கையெழுத்து அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது. )**

3. எதிரி ராமசாமி என்பவரை காலை 10.15 மணி முதல் 11.00 மணி வரை விசாரித்து ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்தார். அதில் நானும், கிராம உதவியாளர் செல்வகுமார் என்பவரும் சாட்சி கையெழுத்து செய்தோம். என்னிடம் காட்டப்படும் எதிரி ராமசாமி என்பவரின் ஒப்புதல் வாக்குமூல நகலில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையது. ( **அந்த கையெழுத்து அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. )

4. பின்பு, முத்துநாயக்கன்பட்டியில் உள்ள திரௌபதி அம்மன் கோயிலுக்கு சுப்ரமணி என்பவர் ஆய்வாளரையும், எங்களையும் அழைத்துச் சென்றார். அங்கு, இருந்த லாரியை காவல் ஆய்வாளரிடம் அடையாளம் காட்டினார். அங்குவைத்து என்னிடம் சாட்சி கையெழுத்து வாங்கினார்கள். பின்பு, தாரமங்கலம் அருகில் உள்ள ஆரூர்பட்டி ஏரி அருகில், சுப்ரமணியும், ராமசாமியும் லாரியுடன் சென்றதாகவும், லாரியில் டீசல் தீர்ந்துவிட்டதால், லாரியை நிறுத்திவிட்டு, டீசல் வாங்கச் சென்றதாகவும், பின்பு, போலிசார் அவர்களை பிடித்துக்கொண்டதாகவும், சுப்ரமணியும், ராமசாமியும் போலிசாரிடம் சொன்னார்கள். போலிசார் விசாரித்தார்கள்.

**இரண்டாம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

5. நான் தினமும் பாகல்பட்டி கிராம அலுவலகத்திற்கு எத்தனை மணிக்கு செல்வீர்கள் என்றால், காலை 07.30 – 08.00 க்குள் வந்துவிடுவேன். ஓமலூர் காவல் ஆய்வாளர் எத்தனை மணிக்கு தொலைபேசியில் அழைத்தார் என்றால், காலை 09.00 மணிக்கு அழைத்தார். பொதுவாக, காவல் துறையில் அழைத்தால் அலுவலகத்தில் இருந்து வெளியில் செல்வதற்கு முன்பாக நாட்குறிப்பிலோ அல்லது பலகையிலோ எழுதி வைத்துவிட்டு, செல்வேன் என்றால் சரி.

6. சம்பவத்தன்று, அவ்வாறு எழுதி வைத்துவிட்டு சென்றேனா என்றால் எழுதிவைத்துவிட்டு தான் சென்றேன். காவல் ஆய்வாளர் என்னை அழைத்ததன் பேரில் நானும் எனது உதவியாளரும், எனது ஆக்டிவா இருசக்கர வாகனத்தில் பெருமாள் கோயிலுக்கு நேரடியாக சென்றோம். நான் சென்றபோது, அங்கு 2 – 3

நபர்கள் இருந்தார்கள். அவர்களை தவிர்த்து காவல் துறையினர் சீருடையில் இருந்தார்கள்.

7. முதல் விசாரணையில் நான் கூறியுள்ள சங்கதிகளை தான் போலிசார் விசாரணையிலும் கூறியுள்ளேன் என்றால் சரி. 2 ஆம் எதிரி சுப்ரமணியடமிருந்து பெறப்பட்ட ஒப்புதல் வாக்குமூலத்தை யார் எழுதினார்கள் என்றால் காவல் ஆய்வாளர் தான் எழுதினார். பாகல் பட்டியில் உள்ள பெருமாள் கோயிலுக்கு, அருகில் எதிரிகளின் ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்தபின்பு, முத்துநாயக்கன் பட்டி திரௌபதியம்மன் கோயிலுக்கு போலிசார் அவர்களது வாகனத்திலும், நானும், எனது உதவியாளரும் எனது ஆக்டிவா இருசக்கர வாகனத்தில் சென்றோம்.

8. இவ்வழக்கின் இரண்டு எதிரிகளின் ஒப்புதல் வாக்குமூலத்திலும் உள்ள என்னுடைய கையெழுத்தின் கீழ் நேரமும், தேதி, மாதம், வருடம் குறிப்பிடவில்லை என்றால், சரி. எதிரிகளிடமிருந்து ஒப்புதல் வாக்குமூலம் பெறப்படும்போது, அரசு அதிகாரி இருக்க வேண்டும் என்பதற்காக போலிசார் என்னை காவல் நிலையத்திற்கு அழைத்து கையெழுத்து பெற்றுக்கொண்டார்கள் என்றாலும், நான் ஒப்புதல் வாக்குமூலம் பெறப்பட்ட இடத்திற்கோ அல்லது வழக்கு சொத்துக்கள் கைப்பற்றப்பட்ட இடத்திற்கோ செல்லவில்லை என்றாலும், காவல் நிலையத்தில் வைத்து கையெழுத்து செய்துவிட்டு தற்போது பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

9. உண்மையில், நான் ஒப்புதல் வாக்குமூலம் பெறப்பட்ட இடத்திற்கோ அல்லது வழக்கு சொத்துக்கள் கைப்பற்றப்பட்ட இடத்திற்கோ சென்றிருந்தால் எனது கையெழுத்திற்கு கீழ் தேதியை குறிப்பிட்டிருப்பேன் என்றால் சரியல்ல. ஏற்கனவே தயாரித்து வைக்கப்பட்டிருந்து ஆவணங்களில் கையெழுத்து செய்துவிட்டு, பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை : இல்லை**

**விசாரணை முடிந்த நேரம் : மதியம் 01.31 மணி**

ஒம்/-ச.ஷர்மிளா,

குற்றவியல் நீதித்துறை நடுவர், ஓமலூர்.